## புனித கன்னி மரியாவின் விண்ணேற்பு பெருவிழா

திருவெளிப்பாடு 11: 19; 12: 1-6, 10; 1; கொரிந்தியர் 15: 20-26; லூக்காஸ் 1: 39-56

**அன்பினால் இயங்கும் விசுவாசம் ஏற்கனவே மாட்சிமைக்குள் அடியெடுத்து வைக்கிறது."**

### முன்னுரை

கலங்கரை விளக்கக் காவலர் ஒருவர் சொன்னார்: கடுமையான புயலின் போதுதான் ஒரு போதும் அலைகளைக் கவனிப்பதில்லை, மாறாக விளக்கின் ஒளி மாறாமல் எரிவதிலேயே கவனம் செலுத்துவதாகக் கூறினார். பயந்த மாலுமிகளுக்கு ஆரவாரமோ பதற்றமோ தேவையில்லை; அவர்களை வீட்டிற்கு வழிநடத்தும் நிலையான ஒளி மட்டுமே தேவை என்பதை அவர் அறிந்திருந்தார். தான் உதவிய மனிதர்களை அவர் நேரில் பார்த்ததே இல்லை, ஆனால் அந்த ஒளி முக்கியமானது என்பதை அவர் நம்பினார்.

இன்று திருச்சபை அன்னை மரியாவை விசுவாசத்தின் அந்த நிலையான ஒளியாகக் கொண்டாடுகிறது. அன்னையின் விண்ணேற்பில் மரியாவின் மாட்சியை மட்டுமல்ல, கிறிஸ்துவில் மனித குலத்திற்குக் காத்திருக்கும் விண்ணக இலக்கையும் காண்கிறோம். மறைவான, எளிமையான, விசுவாசமிக்க, அன்பான அவரது வாழ்க்கை, இறைவன் தம் மக்கள் அனைவருக்கும் விரும்பும் நிறைவை ஏற்கனவே அடைந்துவிட்டது. கிறிஸ்துவை இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழச் செய்த ஆண்டவர், மரியாவையும் விண்ணக மாட்சிமைக்கு உயர்த்தியுள்ளார்.

நற்செய்தியில் மரியா எலிசபெத்தைச் சந்திக்க "விரைந்து" செல்வதைக் காண்கிறோம். அவரிடமிருந்த விசுவாசம் வெறும் தனிப்பட்டதாகவோ அல்லது செயலற்றதாகவோ இருக்கவில்லை. அவர் கிறிஸ்துவை மற்றொருவரின் வாழ்க்கைக்குள் எடுத்துச் சென்றார்; கிறிஸ்து எங்கு வந்தாரோ அங்கு மகிழ்ச்சி விழித்துக்கொண்டது. எலிசபெத்தின் வயிற்றில் இருந்த குழந்தை துள்ளியது, வீடு புகழ்ச்சியால் நிறைந்தது. அன்பில் இயங்கும் விசுவாசம் ஏற்கனவே விண்ணக வாழ்வின் பங்கை அனுபவிக்கத் தொடங்குகிறது.

ஆயினும், நம் சொந்த விசுவாசம் எப்போதும் நிலையானதாக இருப்பதில்லை என்பதை நாம் அறிவோம். சில நேரங்களில் நம்பிக்கைக்குப் பதிலாக பயத்தையும், சேவைக்குப் பதிலாக சுயநலத்தையும், எதிர்பார்ப்பிற்குப் பதிலாக மனச்சோர்வையும் தேர்ந்தெடுக்கிறோம். எனவே, இந்தத் தூய மறை நிகழ்வுகளைக் கொண்டாட நம்மை ஆயத்தம் செய்யும்போது, ஆண்டவரிடம் இரக்கத்தையும் குணப்படுத்துதலையும் கேட்போம்.

## மறையுரை

அமைதியான ஒரு கடலோரக் கிராமத்தில் ஒரு வயதான பெண்மணி தனியாக வாழ்ந்து வந்தார். அலைகளின் ஓசை, பழைய கடிகாரத்தின் டிக்-டிக் சத்தம், அண்டை வீட்டாரின் வருகை என அவரது நாட்கள் எளிமையாகக் கழிந்தன. ஒரு நாள் மதியம், தனிமை அவரை வாட்டக்கூடும் என்று நினைத்து, அவருக்கு ஆறுதல் சொல்ல ஒருவர் வந்தார். ஆனால் சென்று வந்த பிறகு அவர் ஒரு எதிர்பாராத உண்மையைப் பகிர்ந்துகொண்டார்: "நான் அவருக்கு ஆறுதல் சொல்லத்தான் சென்றேன், ஆனால் திரும்பி வரும்போது என் மனமே லேசாகிவிட்டது."

அவரிடம் பெரியதாக எதுவும் இல்லை—தேநீர், பழைய கதைகள், மற்றும் ஒரு அமைதியான பிரசன்னம் மட்டுமே இருந்தது. ஆயினும் அந்த பிரசன்னம் அவரைச் சுற்றியிருந்த சூழலையே மாற்றியது.

இன்றைய நற்செய்தியில் நடப்பதும் இதைப் போன்றதே.

மரியா எலிசபெத்தைச் சந்திக்க "விரைந்து" செல்கிறார். முதல் பார்வையில், இது ஒரு சாதாரண குடும்பச் சந்திப்பு போலத் தோன்றுகிறது. ஆனால் அந்த எளிய பயணத்தின் அடியில் மறைநூலின் மிகப் பெரிய மறைபொருள் உள்ளது: இறைவன் அமைதியாக மற்றொருவரின் வீட்டிற்குள் எடுத்துச் செல்லப்படுகிறார்.

அங்கு என்ன நடக்கிறது என்பதை கவனியுங்கள்! மரியா வந்த கணத்திலேயே மகிழ்ச்சி பொங்குகிறது. எலிசபெத்து தூய ஆவியால் நிரப்பப்படுகிறார். அவர் வயிற்றில் இருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளுகிறது. ஆசீர்வாத வார்த்தைகள் வழிகின்றன. மரியா செல்வத்தையோ, அதிகாரத்தையோ, விளம்பரத்தையோ கொண்டுவரவில்லை. அவர் கிறிஸ்துவை மட்டுமே கொண்டுவந்திருந்தார். ஆயினும் கிறிஸ்துவின் மறைவான பிரசன்னம் எல்லாவற்றையும் மாற்றுகிறது.

வாழ்க்கையில் வார்த்தைகளை விட பிரசன்னம் மிக முக்கியமானதாக இருக்கும் தருணங்கள் உண்டு. உணர்வற்ற நிலையில் இருக்கும் நோயாளிகள் கூட, அன்புக்குரியவர் அறைக்குள் நுழையும்போது எதிர்வினை ஆற்றுவதைப் பற்றிச் செவிலியர்கள் கூறுவதுண்டு. கை இறுக்கப்படுகிறது, முகம் மென்மையாகிறது, இதயத் துடிப்பு சீராகிறது. ஒரு செவிலியர் சொன்னார்:

"ஆன்மா தான் இனி தனியாக இல்லை என்பதை உணர்வது போல அது இருக்கிறது."

மரியாவின் சந்திப்பு சரியாக அந்த மறைபொருளையே சுமந்து செல்கிறது. பிறக்காத கிறிஸ்து அவருக்குள் மறைந்திருக்கிறார், ஆனால் அவரது பிரசன்னம் ஏற்கனவே வாழ்வைத் தருகிறது.

உண்மையான விசுவாசம் எப்போதும் அதைத்தான் செய்கிறது. விசுவாசம் என்பது வெறும் தனிப்பட்ட நம்பிக்கை அல்ல. விசுவாசம் இயங்குகிறது, பயணம் செய்கிறது, கிறிஸ்துவைப் பிறரை நோக்கிச் சுமந்து செல்கிறது.

மரியாவின் விண்ணேற்பு, அந்த விசுவாச வாழ்க்கையின் நிறைவைக் கொண்டாடுகிறது. எப்போதோ ஒருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதற்காக மட்டும் திருச்சபை மரியாவைக் கனம்பண்ணவில்லை. நாசரேத்திலும், பெத்லஹேமிலும், எகிப்தின் நாடோடி வாழ்விலும், சாதாரண மறைவான ஆண்டுகளிலும், கானா ஊரிலும், இறுதியாக சிலுவையின் அடியிலும் அவர் இறுதி வரை விசுவாசமாக நிலைத்திருந்ததால் திருச்சபை அவரைக் கனம்பண்ணுகிறது.

அவரது மாட்சிமை விண்ணகத்தில் தொடங்கவில்லை. அது தினசரி நம்பிக்கையில் தொடங்கியது.

ஒரு ஆசிரியர் தன் மாணவர்களிடம், "பெருமை என்பது அது நிகழும்போது பெரும்பாலும் கண்ணுக்குத் தெரிவதில்லை" என்று கூறினார். அவர் ஒரு சிறிய விதையைக் காட்டி, "இதில் பெரிய ஆலமரத்தை யாராவது பார்க்கிறீர்களா?" என்று கேட்டார். மாணவர்கள் சிரித்தார்கள், ஏனென்றால் அவர்கள் பார்த்தது ஒரு சிறிய விதையை மட்டுமே. ஆனால் அதற்குள் மிகப் பெரிய ஒன்று மறைந்திருந்தது.

உலகத்தின் பார்வையில் மரியாவின் வாழ்க்கை சிறியதாகத் தெரிந்தது.

ஒரு கிராமத்துப் பெண், அமைதியான தாய், படைகள் இல்லை, அரசியல் அதிகாரம் இல்லை, விளம்பரம் இல்லை. ஆயினும் அவருக்குள் இறைவனின் அரசு மலர்ந்துகொண்டிருந்தது.

இன்று விண்ணேற்புப் பெருவிழா, இறைவன் அன்று முதல் என்ன கண்டார் என்பதை வெளிப்படுத்துகிறது.

திருவெளிப்பாடு நூல், பரிதியை ஆடையாக அணிந்து, அரக்கனை எதிர்க்கும் பெண்ணின் பிரம்மாண்டமான படிமத்தை நமக்குத் தருகிறது. நன்மை எப்போதும் போராட்டத்தைச் சந்திக்கிறது என்பதை அது நினைவூட்டுகிறது.

விசுவாசம் ஒரு போதும் போராட்டமின்றி வாழ்ந்துவிட முடியாது.

சில நேரங்களில் புனிதம் நிறைந்த மனிதர்கள் சவால்களோ பயமோ இல்லாதவர்கள் என்று நாம் கற்பனை செய்கிறோம். ஆனால் மரியா நிச்சயமற்ற தன்மையை அறிந்திருந்தார், தவறான புரிதல்களைச் சந்தித்தார், துன்பங்களை அனுபவித்தார். ஒரு வாள் அவரது இதயத்தை ஊடுருவும் என்று சிமியோன்

எச்சரித்தார். தன் மகன் புறக்கணிக்கப்பட்டு சிலுவையில் அறையப்படுவதை அவர் பார்த்தார்.

ஆயினும் தீமை கடைசி வார்த்தையாகி விடவில்லை!

போர்க்கால ஐரோப்பாவில், இரவில் விளக்குகளை அணைத்து வாழ நிர்பந்திக்கப்பட்ட ஒரு குடும்பத்தைப் பற்றிய கதை உண்டு. எதிரி விமானங்கள் இலக்குகளைத் தேடுவதால் வெளிச்சம் எதுவும் வெளியே தெரியக்கூடாது. ஆனால் ஒரு தாய் தன் புதுப்பிறந்த குழந்தை இருட்டைக் கண்டு பயந்ததால், தடிமனான திரைகளுக்குப் பின்னால் ஒரு சிறிய மெழுகுவர்த்தியை ரகசியமாக எரியவைத்தார். பிறகு ஒரு பக்கத்து வீட்டுக்காரர் சொன்னார்: "வெளியிலிருந்து அந்த ஒளியைப் பார்க்க முடியாது, ஆனால் ஏதோ ஒரு ஒளி இருக்கிறது என்பதை உணர முடியும்; ஏனெனில் முழு வீட்டின் சூழலே வித்தியாசமாக இருந்தது."

அந்த மறைவான ஒளி அன்னையின் அழகான வடிவம். அவர் கிறிஸ்துவை அமைதியாகச் சுமக்கிறார், ஆனால் அவர் செல்லுமிடமெல்லாம் சூழல் மாறுகிறது.

திருச்சபையும் அவ்வாறே இருக்க அழைக்கப்படுகிறது. உரத்த அதிகாரத்தினால் அல்ல, ஆடம்பரத்தினால் அல்ல; மாறாக வீடுகளுக்கும், மருத்துவமனைகளுக்கும், பள்ளிகளுக்கும், பணிபுரியும் இடங்களுக்கும், காயம்பட்ட இதயங்களுக்கும் கிறிஸ்துவைக் கொண்டு செல்லும் மறைமுகமான விசுவாசத்தினால்!

சில நேரங்களில் கிறிஸ்தவர்கள் தங்கள் செயல்கள் சாதாரணமானவையாக இருப்பதால், தான் பெரியதாக எதையும் சாதிக்கவில்லை என்று நினைக்கிறார்கள்: தனிமையில் இருப்பவரைச் சந்திப்பது, விசுவாசத்தோடு ஜெபிப்பது, குழந்தைகளைப் பராமரிப்பது, அமைதியாக மன்னிப்பது, கடினமான சூழலிலும் நேர்மையாக இருப்பது, நோயாளியின் அருகில் அமர்ந்திருப்பது, சோர்ந்துபோன ஒருவரைத் தேற்றுவது...

ஆனால் மறைமுகமான அன்பின் செயல்கள் நித்தியமான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கக்கூடும் என்பதை நற்செய்தி நினைவூட்டுகிறது.

ஒரு மருத்துவர், ஒரு கொடூரமான விபத்துக்குப் பிறகு அவசர சிகிச்சைப் பிரிவில் நிலவிய பதற்றத்தை விவரித்தார். கருவிகள் அலறின, ஊழியர்கள் நோயாளிகளிடையே பதற்றத்தோடு ஓடினார்கள், பயம் அறையை நிறைத்தது. ஆனால் அந்த குழப்பத்திற்கும் மத்தியில், ஒரு மூத்த செவிலியர் ஒவ்வொரு கட்டிலாக அமைதியாகச் சென்று, மென்மையாகப் பேசி, ஆறுதல் அளித்தார். பின்னர் அந்த மருத்துவர், "அவர் குழப்பத்தை நீக்கவில்லை, ஆனால் குழப்பத்தால் அழிக்க முடியாத

அமைதியை அவர் சுமந்து வந்தார்" என்று நினைவுகூர்ந்தார்.

அதுவே அன்னை மரியாவிடம் நாம் காணும் அமைதி.

மனித குலத்தின் இலக்கு அழிவு அல்ல, மாட்சிமையே என்பதை விண்ணேற்பு நமக்குச் சொல்கிறது. இறப்பு உண்மையானது, ஆனால் அதுவே முடிவல்ல. இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தவர்களில் கிறிஸ்துவே "முதல்பலன்" என்று பவுல் அடிகளார் கூறுகிறார். கிறிஸ்துவைச் சார்ந்த அனைவருக்கும் இறைவன் என்ன திட்டமிட்டுள்ளாரோ, அதன் முதல் மலர்ச்சியே மரியாவின் விண்ணேற்பு.

பயமும் சோர்வும் நிறைந்த இன்றைய உலகில் இது மிகவும் முக்கியமானது. இன்று பலர் மறைமுகமான சுமைகளைச் சுமக்கிறார்கள்: துக்கம், கவலை, எதிர்காலத்தைப் பற்றிய நிச்சயமற்ற தன்மை, தனிமை, ஏமாற்றம், முதுமை பற்றிய பயம், மரண பயம்.

விண்ணேற்புப் பெருவிழா அந்தப் பயங்களுக்குப் நேராகப் பேசுகிறது. இறைவனில் வாழும் மனித வாழ்க்கை ஒரு போதும் வீணாவதில்லை என்று அது பறைசாற்றுகிறது.

ஒரு பனிப்புயலின் போது மலையேற்ற வழிகாட்டி ஒருவர் பயணிகளை அழைத்துச் சென்றார். எதிரே எதுவும் தெரியவில்லை. இலக்கைப் பார்க்க முடியாததால் குழுவினர் பயந்தனர். வழிகாட்டி எளிமையாக அவர்களுக்கு முன்னால் நடந்து சென்று, பனியில் தன் காலடிச் சுவடுகளை விட்டுச் சென்றார். பின்னர் அவர் அவர்களிடம், "முழுப் பயணத்தையும் நீங்கள் பார்க்க வேண்டியதில்லை, நான் நடந்த இடத்தில் உங்கள் கால்களை வைத்தால் போதும்" என்றார்.

திருச்சபைக்கு அன்னை மரியாவும் அப்படித்தான். அவர் நம்பிக்கையின் அடையாளமாக நமக்கு முன்னே நடந்துசெல்கிறார். மரணத்தைக் கடந்து முடிவில்லா வாழ்வுக்குச் சென்ற கிறிஸ்துவே அவருக்கு முன்னிருக்கும் உண்மையான வழிகாட்டி.

எனவே, விண்ணேற்புப் பெருவிழா மரியாவைப் பற்றியது மட்டுமல்ல, அது நமது எதிர்காலத்தைப் பற்றியது. இப்போது நாம் வாழும் சீடத்துவத்தின் அர்த்தத்தைப் பற்றியது. அன்பில் இயங்கும் விசுவாசம் ஏற்கனவே மாட்சிமைக்குள் அடியெடுத்து வைக்கிறது.

ஒவ்வொரு நம்பிக்கையின் செயலும், அமைதியான தியாகமும், இறைவனுக்குச் சொல்லும் விசுவாசமான "ஆம்" என்ற பதிலும், கருணையின் மறைமுகமான பணிகளும் ஏற்கனவே விண்ணகத்திற்குச் சொந்தமானவை.

மரியாவைப் போல, நாமும் கிறிஸ்துவை உலகிற்குச் சுமந்து செல்ல அழைக்கப்பட்டிருக்கிறோம். கிறிஸ்து எங்கு அன்போடு சுமந்து செல்லப்படுகிறாரோ, அங்கெல்லாம் வாழ்வு மீண்டும் துள்ளத் தொடங்குகிறது.

**ஆமென்.**

**Prepared by:** Fr. Paul Julian, Perth, Australia
**and Translated by:** Leonard Arulandhu, Holy Family Church, Chennai